உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி கக. Vol—XI.	காளயுக்தி௵ மாசி௴ MARCH 1919.	பகுதி உ. No. 2.

ஸ்ரீ:

ஆத்மார்த்த கல்வி அவசியம்.

1. "கற்க கசடறக் கற்பவை கற்றபி னிற்க வதற்குத் தக." என்று திருவள்ளுவநாயனார் அருளியிருப்பதில் "கற்பவை" என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவித புருஷார்த்தத்தை உணர்த்துவதாக ஆன்றோர் அபிப்பிராயம். அர்ஜுனனுக்குப் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் யுத்தகளத்தில் கீதையை உபதேசித்திருக்கிறார். கீதையிலும் இஹத்திற்கும், பரத்திற்கும் வேண்டிய தத்துவங்களே உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினால், கற்பித்தலானது, இஹத்திற்கும் பரத்திற்கும் வேண்டிய விஷயங்களையே கற்பிக்கவேண்டுமென்பது பெரியோர்களுடைய கருத்து என்பது புலப்படுகின்றது.

2. ஆத்மார்த்தமான உலகுவேறு, லௌகிக உலகம் வேறு என்றும் அவைகளுக்குள் பரஸ்பர ஸம்பந்தமில்லையென்றும் சாதாரண ஜனங்களும், மதப்பயிற்சி உள்ள வித்வான்களும் இப்பொழுது அபிப்பிராயப்பட்டு வருவதற்கொப்பந்தமில்லாமல், முற்காலத்திய உபாத்தியாயர்கள் " இவ்வுலகு முழுமையும் ஈசுவரனுடைய ப்ரபஞ்சமென்றும் உலகவாழ்க்கையில் சுவர்க்கம், நரகம், இவைகள் இடம் வேறுபட்டு இருக்கவில்லையென்றும் ப்ரபஞ்சத்தில் ஈசுவரனில்லாத இடம் கிடை-

யாதென்றும் அவர் நினைவுக்கும் உணர்வுக்கும் அகப்படாத விஷயமும் கிடையாதென்றும் ” நாம் செய்யும் காரியமோவ்வொன்றும் ஈசுவரனுடைய கைங்கர்யமாகப்பாவித்துச் செய்துவரவேண்டுமென்றும் அவ்விதம் செய்வதினால் பரஸ்பரம் அன்பு விருத்தியாகிச் சகோதர பாவம் பரவிச் சச்சரவுக்கிடமின்றியில் ஜனங்கள் ஒத்து வாழக்கூடுமென்றும் தங்களிடம் கல்விகற்கும் மாணாக்கர்களுக்குக் கற்பித்து வந்தார்களெனத் தெரிகிறது. தாங்களும் தங்களுடைய நடத்தையால் மேற்படி கொள்கைகளை அனுஷ்டித்துக்காட்டியும் வந்தார்கள். ஒவ்வொருவனும், காயம், வாக்கு, மனசு, இவைகளினால் செய்யும் காரியங்கள் ஈசுவரன் காரியமென்று பாவித்துத் தினசரி நடக்கவேண்டுமென்ற கருத்து அமைந்த மந்திரம் ஒன்றைத்துவிஜர்களுக்காக ரிஷிகள் ஏற்படுத்திய சந்தியாவந்தனத்தில் சேர்த்திருக்கிறார்கள். இதன்றியில் மனிதர்களை இஹத்திலும் பரத்திலும் முன்னுக்கு வரவொட்டாமல் செய்யும் அபகுணங்களான கோபம், ஆசை இவைகளைத் தவிர்க்கவேண்டும் என்ற கருத்தடங்கிய மந்திரத்தையும் மேற்படி சந்தியாவந்தனத்தில் சேர்த்துள்ளார். யார் யார் எந்த ரூபத்தை உபாசித்தாலும் எல்லாம் ஒரே ஈசுவரனைப்போயடையுமென்று கருத்தடங்கிய மந்திரத்தையும் சந்தியாவந்தனத்தில் சேர்த்துள்ளார். இதே கருத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவானும் கீதையில் அருளியிருக்கிறார். ஆனால் இக்காலத்திய துவிஜர்களில் நவீன இங்கிலீஷ் பாடசாலைகளில் கல்விகற்றுச் சர்வகலாசாலையில் பட்டம்பெற்ற அநேகர் சந்தியாவந்தனம் செய்யாமலே விட்டுவிடுகிறார்கள். செய்பவர்களுங்கூட அதனுடைய அர்த்தத்தைக் கவனித்து அவ்விதம் நடக்கப் பிரயத்தனப்படுவதையும் பெரும்பான்மையாகக் காணக்கிடைக்கவில்லை. சுமார் ஆயிரத்துக்கொருவர் அர்த்தத்தைக் கவனித்து நடப்பார்களோ என்னவோ என்பது சந்தேகமாயிருக்கிறது. முற்காலத்தில் இவ்விந்தியாவில் கல்விகற்பிக்கும் தொழிலை வஹித்தவர்கள் பிராம்மணர்களே ஆவார். இவர்கள் குழந்தைகளைக் கல்விகற்பிக்க உபாத்தியாயர் வீட்டுக்கனுப்புமுன் குழந்தைகளுக்கு உபநயன ஸம்ஸ்காரம் செய்தனுப்பும் வழக்கமாயிருந்தது. உபநயன ஸம்ஸ்காரகாலத்தில் சந்தியாவந்

தனம் கற்பிக்கப்படும். இச்சந்தியாவந்தனத்தில் மேற்கண்ட உயர்ந்த தத்வங்களைக் கண்டிருக்கிறது. இதைக் குழந்தைகளுக்கு உபதேசித்துவந்தார்கள் என்றால் மாணுக்கர்களுக்கு எவ்விதக் கல்வி கற்பிக்கப்பட்டுவந்ததென்பது நன்கு விளங்கும். அரசர் சபையிலும் ஆத்மதத்துவஞானிகள் மந்திரிகளாயிருந்திருக்கிறார்கள். ஸ்ரீராமருக்கு ரிஷி வசிஷ்டர் மந்திரி. பொதுவாக இட்சுவாகு வம்சத்திற்கே குருவாயும், மந்திரியாயும் இருந்தவர். இதனால் ராஜாங்க நடவடிக்கைகள் ஆத்மார்த்த உலகுவேறு, லௌகீக உலகம் வேறு என்ற வித்தியாசமில்லாமல் நிகழ்ந்துவந்தன.

3. இக்காலத்திய பள்ளிக்கூடங்களிலோ மேற்கண்ட கருத்தை அறிந்து கல்வி கற்பிக்கப்படவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அதனால் இக்காலத்திய படிப்புத்தாழ்ந்ததசையையடைந்து ஸர்வகலாசாலைகளில் பி. ஏ. (B. A.) எம். ஏ. (M. A.) முதலிய பெரிய பட்டங்கள் பெற்றவர்கள்கூட நல்லொழுக்கம் தவறி நடந்துவருவதைக் காண்கிறோம். இக்காலத்திய படிப்பினால் புத்திமட்டும் கூர்மையாகிறதே தவிர ஸன்மார்க்க முறையும் நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் குறைந்து வருவதைக் காண்கிறோம்.

4. இக்காலத்தில் ஆலயம், பள்ளிவாசல் பூஜாக்ரஹம் முதலிய இடங்களில் மட்டும் ஈசுவரன் இருப்பதாகவும் மற்ற இடங்களில் இல்லையென்றும் "அவனன்றி ஓரணுவு மசையாது" என்ற ஆன்றோர் மொழியை மறந்து இக்காலத்திய ஜனங்கள் நடந்துவருவதைக் காண்கிறோம். அதனால் ஜனங்களுக்குள் அன்பு குறைந்து துன்பங்கள் உண்டாக ஏதுவாகிறது.

5. ஈசுவரன் எங்குமிருக்கிறான் என்ற நினைவுடன் ஒவ்வொரு காரியமும் ஈசுவரகாரியம் என்று ஜனங்கள் செய்துவருவார்களானால் இப்பொழுது நாம் காணும் பரிதாபமான கட்சிகளுக்கு இடமிராது கட்சிகள் வரவர அதிகமாய்க்கொண்டுவருவதால் மேற்படி கட்சிக்காரர்களின் வழக்கைத் தீர்க்க ராஜாங்கத்தில் நியாயஸ்தலங்களும் வரவர விருத்தியாகிக்கொண்டேவருகின்றன. அதனால் வழக்காளிக

ளும் ராஜாங்கத்தாரும் அதிகப்பொருளைச் செலவழிக்கவும் காரணமாகிறது. தேசசமாதானத்திற்குக் குறைவு ஏற்படுகிறது. அதனால் போலீஸ்காரர்கள் முதலிய பாதுகாப்புக்காரர்களை அதிகச் செலவின் பேரில் நியமிக்கவும் ஏதுவாகிறது. இவைகளுக்கு மூலகாரணம் யாதென? விசாரிக்கப்புகின் ஈசுவரனுடைய ஒரு பிரபஞ்சத்தை இரண்டாகப் பிரித்து அதாவது ஈசுவர விஷயமானதொன்று மற்ற உலக சம்பந்தமானதொன்று என்று இவ்விதமாய் நம் வாழ்வை இரண்டாய்ப்பிரித்தல்தான். ஆனால் மதஸ்தாபகர்கள் எல்லோரும் இவ்விதம் ஒரு உலகை இரண்டாகப்பிரித்து வாழக்கூடாதென்று வற்புறுத்தி உபதேசித்து இருக்கிறார்கள். அவர்களுடைய சிஷ்யர்களான நாம் உதட்டினால் அவ்வுபதேசங்களை உச்சரித்தாலும் இருதயத்திலுணராமல் நம் வாழ்நாளைக்கழிக்கிறோம். ஆகையால்தான் ஒவ்வொரு தேசமும் நாகரிகமடைந்தாலும் அந்நாகரிகம் வெளிப்புடையாயிருக்கிறதே தவிர வாஸ்தவத்தில் காட்டுமனிதனுடைய சுபாவகுணத்தை ஒத்திருக்கிறது. இதற்கு ஐரோப்பா தேசத்தில் நடந்த உக்கிரமான சண்டையே ஒரு திருஷ்டாந்தமாக ஏற்படுகிறது.

6. முற்காலத்தில் பொதுவாக மாணாக்கர்கள் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் கிருஹத்திலேயே இருந்து அவர்களுடைய மக்கள் போல் பாவிக்கப்பட்டும் கல்வி கற்பிக்கப்பட்டும் வந்தார்கள். அதனால் உபாத்தியாயர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் அன்பும் ஸ்நேகமும் ஏற்பட்டு நிகழ்ந்துவந்தன. இதை அனுசரித்து இங்கிலீஷ் பாஷையில் கவிகள் ஏற்படுத்துவதில் பெயர்பெற்று, ஐரோப்பாவில் ஏற்பட்ட நோபிள் ப்ரைஸ் (noble prize) 8000-பவுன் வெகுமதியைப்பெற்ற நமது தேசத்தவரான ஸர் ரபீந்திரநாத் டாகோர் (Sir Rabindra Nath Tagore) என்பார் வங்காளதேசத்தில் மலையடிவாரத்தில் போல்பூர் என்ற இடத்தில் ஒரு வித்தியாசாலை ஏற்படுத்தி நடத்தி வருவதைக் கேட்கத் திருப்திகரமாயிருக்கிறது. இம்மாதிரி வித்தியாசாலைகள் அநேகம் ஏற்படக் கடவுள் துணைசெய்வாராக. இக்காலத்திலோ அவ்வித அன்பும் ஸ்நேகமும் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயருக்கும் பெரும்பாலும் ஏற்பட்டதாக இல்லை. மேலும் மாணாக்கர்

கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில்வந்தால் உபாத்தியாயர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் பெரும்பாலும் இருந்துவருகிறது. இக்காலத்திய பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பி ஏற்பட்ட சம்பளத்தைச் சரியாகக் கொடுத்துவந்தால் தங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயமான பொறுப்புத்தங்களை விட்டு நீங்கிவிட்டதாக நினைக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மேலான அதிகாரிகளால் தங்கள் வகுப்புகளுக்கேற்பட்ட பாடங்களின் அட்டவணைப்படி (syllabus) கல்வி கற்பித்து வருஷாந்தரப் பரீட்சையில் தேறும்படி செய்துவிட்டால் தங்களுக்கும் மாணுக்கர்களுக்கும் உள்ள சம்பந்தம் நிறைவேற்றப்பட்டுவிட்டதென்று நினைக்கிறார்கள். இதை யோசிக்கையில் மாணுக்கர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியை ஒரு சரக்குப்போல் பாவித்துப் பெற்றோர் உபாத்தியாயரிடமிருந்து கிரயத்திற்கு வாங்குகிறதாகக்கொள்ளலாம். பொதுவாகக் கல்வியானது மாணுக்கர்களின் நடத்தையைச் சீர்படுத்துவதற்காக ஏற்பட்டதென்பதை உணர்வதாகத்தெரியவில்லை. தற்கால நிலைமையில் அநேக மாணுக்கர்கள் தங்கள் பெற்றோர் பாதுகாப்போர் (guardians) இவர்களைவிட்டு வேறு இடங்களுக்குச்சென்று கல்விகற்கும்படியாக நேருகிறதில் அவர்களுடைய நடத்தையைக் கவனித்துச் சீர்படுத்துவோர்கள் இல்லாமையிருந்துவருகிறது. பள்ளியில் கல்விகற்கும் காலம் தவிர மாணுக்கர்கள் வெளியில்வந்த பிற்பாடும் அவர்கள் விளையாடும் காலத்திலும் உபாத்தியாயர்கள் அவருடன் கூடியிருந்து உறவாடி விளையாடுவாரானால் முன்போல மாணுக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஸ்நேகமும், அன்பும் உண்டாகும். இதை உத்தேசித்தே உயர்ந்த சிந்தனையுள்ள சில உபாத்தியாயர்கள் தங்கள் மாணுக்கர்களுடன் வித்தியாசமின்றிக் கலந்தே விளையாடி வருகிறார்கள். இதை எல்லா உபாத்தியாயர்களும் அனுசரிப்பதே நலம்.

7. பெற்றோர் பாதுகாப்போர் இவர்களை விட்டு வேறு இடங்களில் படித்துவருகிறவர்களுக்குப் பள்ளிக்கூடங்களை ஒட்டிப் போஜன சாலைகள் (hostels) ஏற்படவேண்டியதவசியமென்று சில ராஜாங்கத்

தாரும் சில சொந்த வித்தியாசாலை ஸ்தாபகர்களும் அபிப்பிராயப்பட்டு வேண்டிய ஏற்பாடு செய்துமிருக்கிறார்கள். அப்படிப் போஜன சாலைகளில் படிக்கும் மாணுக்கர்கள் ஒரு குறிப்பிட்ட உபாத்தியாயரின் மேற்பார்வையில் இருக்கும்படி செய்திருக்கிறார்கள். இது நல்ல காரியமே, ஆனால் சில இடங்களில் மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயர்களிற் சிலர் பையன்களுடைய மதம், ஆசாரம், கொள்கை இவைகளை அறிந்து அதற்குத் தக்க ஏற்பாடு செய்யாததினால் பையன்களுக்குக் கஷ்டங்கள் நேரிட்டு வருவதானது பரிதபிக்கத்தக்கதே. இவைகளெல்லாம் சீக்கிரம் நேர்படுமென நினைக்கிறேன். இவ்வாறே எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் போஜனசாலை ஏற்படவேண்டியது அவசியமென்பது பிள்ளைகளின் நடத்தை சீர்படுவதில் சிரத்தை உள்ளோருடைய அபிப்பிராயம்; அவ்விதம் சீக்கிரம் நடைபெறப் பகவான் அருள் புரிவாராக,

8. கல்வி கற்பிப்பதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை அடியிற் காணலாம்.

ஜீவன் யார்?—சரீரம் வேறு அதற்குள்ளிருக்கும் ஆத்மா வேறு. சரீரம் அழிவுள்ளது. ஆத்மா அழிவில்லாதது. ஆத்மா ஈசுவரன் அம்சம். ஈசுவரனிடமிருந்து வந்து ஈசுவரனிடம் போய்ச் சேருகிறது. ஆத்மாதான் ஜீவன்.

அவன் சக்திகள் என்ன?—அக்னியின் பொறிகள் அக்னி போலாகி அக்னியின் குணத்தை அடைவது போலும்; ஒரு வித்தானது பெரியமரமாவது போலும்; ஈசுவரருடைய அம்சமான ஜீவன் ஈசுவரன் போலாய் அவரது எல்லாச் சக்தியையும் அடையலாம்.

சகோதரத்துவம்.

நம்முடைய தேசத்தவரும், தேசாபிமானியுமான Sir, J.C. Bose (ஸர். ஜெ. ஸி. போஸ்) என்ற மஹான், தாதுவர்க்கங்கள் புல் பூண்டு வகையரா ஸ்தாவரங்கள் மிருகங்கள் பக்ஷிகள் ஊர்வன முதலிய ஜங்கமங்கள் மனிதவர்க்கம் இவைகளுக்குள் ஒரே தன்மையான உயிர் பரவி இருக்கிறதென்றும்; உணர்ச்சி இல்லாததுபோல் தோன்றும்

தாதுவர்க்கத்திற்கும் உணர்ச்சியிருப்பதாகவும் ஒரு அற்புதக்கருவியால் நன்குவிளக்கிக் காட்டிவருகிறார். கீதையிலும் பகவான் கிருஷ்ணன், காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம் நூலில் மணிகள் கோக்கப்பட்டிருப்பனபோல் தம்மிடத்தில் கோக்கப்பட்டிருப்பதாக அருளியிருக்கிறார்.

மத்த: பாதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தனஞ்சய!
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ!!
(கீதை 7-து அத்தியாயம் 7-து ஸ்லோகம்).

பிராணிகள் கரியமலவாயுவைத் தங்கள் ஸ்வாசத்தினால் வெளிவிட அதை ஸ்தாவரங்களான புல் பூண்டு செடி மரம் வகையராக்கள் உட்கொள்ளுகின்றன. அவைகள் வெளிவிடும் பிராணவாயுவை மனிதர்களும் மற்றப்பிராணிகளும் உட்கொள்ளுகிறார்கள். இதனால் மனிதர் பிராணிகள் ஸ்தாவரங்கள் தாதுவர்க்கம் இவைகளுக்குள் பரஸ்பர சம்பந்தமேற்பட்டிருக்கிறதென்று நன்கு விளங்குகிறது. ஆகையால் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் சகோதர பாவமேற்பட்டு நிகழவேண்டுமென்பது ஈசுவர சங்கல்பம் என்று கொள்ளலாம்.

மனித வர்க்கத்துக்குள் முக்கியமாய் ஏற்பட்டிருக்கும் சம்பந்தம்.—ஒவ்வொரு சரீரத்திலிருந்தும் பல அணுக்கள் நிமிஷந்தோறும் வெளிக்கிளம்பி மற்றச் சரீரங்களில் பிரவேசித்து வருகிறதென்று நவீன சாஸ்திரிகள் கண்டறிந்து தெரிவித்திருக்கிறார்கள். இப்படி வெளிப்படுகிற அணுக்கள் சாதாரண ஸ்தூலக் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

ஒருவருடைய சரீரத்திலிருந்து உதிக்கும் சப்தமானது மற்றவர்களைப் போய்ச்சேருகிறதை நாம் பார்க்கிறோம். இவ்விதமாகவே மனதில் உண்டாகும் எண்ணங்களாகிய சலனங்கள் அதிக நுண்ணிய திரவியங்களால் அமைந்த மானஸிக ஆகாயத்தில் அலைகளாய்ப் போய்ப் பிறருடைய மனதைத்தாக்குகின்றன. இதைப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.

இவைகளினால் ஒவ்வொருவனும் தன்னுடைய காயம் வாக்கு மனம் இம்மூன்றினாலும் பிறரைப் பாதித்து வருகிறான் என்று பரிஷ்காரமாய்த் துலங்குகிறது. இவனுடைய செய்கைகளுக்குத் தக்கவாறு பிறருக்குச் சுகம் துக்கம் உண்டாகின்றன. ஜீவராசிகளெல்லாம் ஒரு சங்கிலியில் கோக்கப்பட்ட வளையங்கள் போலிருப்பதால், ஒருவருக்குண்டாகும் சுக துக்கம் மற்றவர்களை அவர்கள் அறியாமலே தாக்குகிறது என்று நன்கு துலங்குகிறது.

9. பிரகிருதத்தில் ஐரோப்பாவில் சில குறிப்பிட்ட தேசத்தார்களுக்குள் முதலில் நேரிட்ட சண்டை மேற்படி கண்டத்தின் பல தேசங்களுக்கும் ஆப்பிரிக்கா ஆசியா அமெரிக்கா இக்கண்டங்களில் உள்ள பல தேசங்களுக்கும் பரவிச் சண்டையில் யாதொரு விதத்திலும் சம்பந்தப்படாத தேசத்தார்களையும் கைத்தொழில் வியாபாரம் முதலிய விஷயங்களில் பாதித்து வருவதைப் பார்க்கிறோம். இவ்விதம் ஸ்தூல உலகில் நிகழுமானால் ஸூட்சும உலகத்திலும் ஏன் நிகழக்கூடாதென்று நாம் சந்தேகிக்கவேணும். ஒருவனுக்குத் தொத்துவியாதி கண்டால் மற்றவர்களுக்கு அந்த வியாதி அணுகாமல் இருக்கும்பொருட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். மனதினால் பிறருக்கு உண்டாகும் கஷ்டங்களோ சௌகரியங்களோ ஸூட்சும லோகங்களில் புலப்படும். அதைச் சாதாரண ஜனங்கள் அறிகிறதில்லை. தீர்க்கதரிசிகள் அறிகிறார்கள். அவர்கள் உலகத்தின் க்ஷேமத்தின்பொருட்டு ஸூட்சும உலகங்களில் சதா கைங்கர்யம்செய்து வருகிறார்கள். அவர்களது அனுக்கிரகம் பெற்ற பலர் பிறர் நன்மையைக்கோரித் தங்களுக்கு நேரும் சங்கடங்களைக் கவனியாமல் சதா உழைத்துவருகிறார்கள். இந்த விஷயங்களை மாணவர்களும் மாணவிகளும் நன்றாய் உணரும்படிசெய்யவேண்டும். இந்தப் பரோபகார கைங்கர்யமானது குடும்பத்தில் ஆரம்பமாய்க் கல்விகற்கும் பாடசாலை கிராமம் மாகாணம் தேசம் முதலியவைகளுக்குப் பரவவேண்டும் என்ற விஷயமும் கற்பிக்கத் தக்கதே.

10. மனதைப்பற்றி ஒரு பெரியவர் அடியில்கண்டவாறு கூறியுள்ளார்.—

" மனமது செம்மையானல் மந்திரம் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானல் வாயுவை யுயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானல் வாசிவை நிறுத்தவேண்டாம்
மனமது செம்மையானல் மந்திரம் செம்மையாமே".

மனதுக்கு இவ்வாறு விசேஷம் வரக்காரணமென்ன வென்று விசாரிப்போம்.

முதலில் இப்பிரபஞ்சமே மனச்சங்கற்பத்தால் ஏற்பட்டுள்ளது. இக்கருத்தைக் கைவல்லிய நூலாசிரியர் "மனத்தினு லெண்ணித் தானே வந்ததிவ்வுலகமாகும்" என்ற பாசுரத்தில் விளக்கியிருக்கிறார். மனிதன் ஈசுவர அம்சமாகையால் மனிதன் சங்கற்பத்தைப் பலவித சிருஷ்டி ,ஸ்திதி லயங்களுக்கு உபயோகப்படுத்தலாம் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடைய கண் முதலான வெளிப்படையான இந்திரியங்கள் மனதுடன் சம்பந்தப்படாதவரை, நாம், பார்த்தல் கேட்டல் முகர்தல் பரிசித்தல் ருசி அறிதல் முதலிய காரியங்களைச்செய்ய வொண்ணுது என்பது எல்லாரும் அறிந்த விஷயமே. கை கால் முதலிய கர்மேந்திரியங்களும் அவைகளின் காரியங்களைச் செய்யா. ஆகையால் எக்காரியத்திற்கும் மனமே காரணமாகிறது.

11. இதனுல் ஒவ்வொருவரும் மனதைச் சரியானபடி வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று விளங்குகிறது. மனதைச் சரிப்படுத்துகிறதெப்படி என்று ஆலோசிப்போம்.—நம்முடைய ஸ்தூல சரீரத்தை வியாதியின்றியில் வைத்துக்கொள்வதற்கு எவ்விதம் சுத்த ஆகாரம், சுத்தக்காற்று, தேகப்பயிற்சி அவசியமோ அவ்விதம் மனச்சுகத்திற்கும் சங்கற்பங்கள் அ த ா வ து எண்ணங்கள் நல்ல சிந்தனைகளை ஸ்மரித்தல், மனதை ஒருமைப்படுத்திக் குரு ஈசுவரன் இவர்களிடம் செலுத்தல், கெட்ட எண்ணங்களைத் தவிர்த்தல் முதலியன. நல்ல விஷயங்களைப்பற்றியும் அவரவர் மனதுக்குப்பிரி

யமான மூர்த்தியைப்பற்றியும் வைராக்யத்துடன் ஸ்மரிப்பதினால் மனதில் கெட்ட எண்ணங்கள் உண்டாகாமல் நாளடைவில் நிறுத்திவிடலாம். இவைகள் தங்கள் மனதை அடக்கும் கடிவாளம் என்னலாம். காமக்குரோத லோப மோக மத மாச்சர்யம் முதலிய அட் குணங்களை அணுகவொட்டாமல் செய்யவேண்டுமானால், அவைகளுக்கெதிரிடைக் குணங்களான அன்பு, பரஉபகாரம், சகோதரபாவம், ராஜ பக்தி தெய்வபக்தி, பெரியோர்கள் பக்தி, பொய்யாமை முதலிய சுப குணங்களைக் கைக்கொள்ளும்படி செய்தல் நலம். இதுதான் கல்வியின் நோக்கம். அஃதாவது மாணாக்கர்கள் மாணவிகள் இவர்களுடைய நடத்தையைச் சீர்ப்படுத்துவதுதான். இதை உணர்ந்து தினசரி வாழ்க்கையில் நடக்கும்படியாக மாணாக்கர்களையும் மாணவிகளையும் செய்வது உபாத்தியாயர் கடமையாம். தினசரி காலையில் ஓர் நற்குணத்தைச் சிந்தித்து அந்தக் குணத்தை அன்றையத்தினம் அனுஷ்டித்துவர முயற்சித்தால் நாளடைவில் நற்குணமே மேலிட்டு அவகுணங்கள் நாளடைவில் மனதைவிட்டு விலகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் கற்பித்துத் தாங்கள் அனுஷ்டித்துக் காட்டக்கூடிய உபாத்தியாயர்களைத் தகுந்த சம்பளத்தின்பேரில் நியமிக்கவேண்டியது ராஜாங்கத்தாருடையவும் வித்யாசாலைகளை ஏற்படுத்திக்கல்வித் தானம்செய்ய விரும்புகிறவர்களுடையவும் கடமையாம். எல்லா விருத்திகளிலும் கல்வி கற்பிக்கும் விருத்தியே சிரேஷ்டமானது. இப்பொழுது சிறுவர்களாய் இருப்பவர்கள் தாம் பின்னால் ராஜாங்கத்தாருக்கும் தேசத்தில் வசிக்கும் ஜனங்களுக்கும் உழைக்கவேண்டியவர்கள். அவர்களை அவ்வித கைங்கர்யத்துக்குத் தக்கவர்களாகச் செய்யவேண்டிய பொறுப்பை வஹித்து அவர்கள் நடத்தையை இப்பொழுது நல்வழிப்படுத்திவிட்டால் பின்னிட்டு ராஜாங்கத்தாருக்கு ராஜ்ய விஷயத்தில் ஜனங்களால் எவ்வித உபத்திரவமும் இல்லாமல் ஜனங்களுக்குள் திருப்தியும் ராஜபக்தியும் ஏற்பட்டும் பரஸ்பர க்ஷேமத்தைக் கோரி வரப்படும் என்பது என்னுடைய தீவிரமான அபிப்பிராயம். வம்பு வழக்குகள் குறைபடவும் களவு முதலிய குற்றச்செய்கைகள்

விருத்தி ஆகாமல் க்ஷீணதசையை அடையுமென்பதில் சந்தேக மில்லை. இப்பொழுது ஜனங்களின் வழக்குகளைத் தீர்ப்பதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கோர்ட்டுகள் (நியாயஸ்தலங்கள்) போலீஸ் சேனை முதலியவைகளைக் குறைத்தும் விடலாம். அதற்காகச் செலவாகும் தொகையும் குறைவுபடலாம்.

12. மனத்தினிடமிருந்து உண்டாகும் சலனங்களான எண் ணங்களுக்கு ரூபமும் வர்ணமும் ஏற்பட்டிருப்பதாக ஸூக்ஷ்ம திருஷ்டி உள்ளவர்கள் கண்டறிந்திருப்பது பவிஷ்யத் புராணத்தில் விபரமாய்த் துலக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் (Thought forms by Mrs. Anne Besant and C. W. Leadbeater) "எண் ணங்களின் ரூபங்கள்" என்ற புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கி றது.

13. மனசலனமானது எவ்விதம் பிறரைப்போய் அடைகிற தென்பதைச் சில உலக திருஷ்டாந்தத்தால் அடியில் விவரிக் கிறோம்.

காற்றினால் பாதிக்கப்படாத ஒரு குளத்தின் ஜலத்தில் ஒரு கல்லை எறிந்தால் கல் விழுந்த இடம் முதல் அலைகள் வட்டவட்ட மாகக் கிளம்பிக் கரை வரைசென்று திரும்ப விழுந்த இடத்திற்கு வந்துசேர்ந்து ஓய்வை அடைகிறது. கரை மண்கரையாய் இருந் தால் மண்ணையும் கரைத்துக்கொண்டு திரும்புகிறது. கரை பாறை யாக இருந்தால் கரைக்கச் சக்தியற்றுப்போய் விடுகிறது. இவ்வித மே ஒருவன் கொள்ளும் எண்ணங்கள் மானஸீக ஆகாயத்தில் அலை களாகக் கிளம்பிப் பிறர் மனதுகளைத் தாக்குகின்றன. அப்படித் தாக்கப்படும் மனமானது சுத்தமானதாகவும் ஸ்திரமான ஸ்வபாவ முடையதாகவும் இருந்தால் சலிக்கச் செய்யச் சக்தியற்றுத்திரும்பி விடுகின்றன.

சஞ்சலமுள்ள மனதுகளைத் தாக்கினால் அங்கே சஞ்சலத்தை அதிகப்படுத்திவிட்டு அவ்விடத்திலுள்ள சலனங்களையும் அதாவது எண்ணங்களின் சிலவற்றை இழுத்துக்கொண்டு உற்பத்தியான

இடத்தில் வந்து சேருகின்றன. ஒருவன் கோப எண்ணத்தை அனுப்பினால் பிறரையும் தாக்கிக் கோப சலனத்தை உண்டாக்கி விட்டுத் திரும்ப இவனிடம் வந்து கோபத்தை அதிகரிக்கச் செய்கிறது. இவ்விதமே மற்ற எண்ணங்கள் விஷயத்திலும் கண்டு கொள்க.

அக்னியானது எரியும் இடத்திற்கு அப்பால் உள்ள பதார்த்தங்களைத் தன் வெக்கையால் தாக்கி மேற்படி பதார்த்தங்களில் தளர்ச்சி உண்டாக்குவதைக் காண்கிறோம். தந்திக்கம்பி இல்லாமல் சமாசாரங்கள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு அனுப்பப்பட்டு வருவதாகக் காண்கிறோம். இவ்விதமே மனச் சலனங்களும் செல்லுகின்றனவெனத் தெரிந்துகொள்க. மனமானது, ஊசிக் காந்தம்போல இழுக்கும் சக்தி உடையதென்று ஒரு பெரியவர் சொல்லுகிறார். ஒவ்வொருவனும் தான் சாதாரணமாய்க் கொள்ளும் எண்ணங்களுக்கு ஒத்த பிறருடைய எண்ணங்களை இழுக்கிறான்.

14. மனித சரீரம் எவ்விதம் அமைக்கப் பெற்றுள்ளதென் பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

அண்டத்திலுள்ள பல லோகங்கள் எவ்வாறு பலவித பிரகிருதி பேதங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அதுபோலவே பிண்டத்திலுள்ள பல கோசங்களும் பலவித பிரகிருதி பேதங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் அன்யோன்ய சம்பந்தம் உண்டு. இந்த விபரங்களை அடியில்கண்ட அட்டவணை காட்டுகிறது.

மனிதன் மரணம் அடைகையில் அவனுடைய அன்னமய கோசம் பிராணமய கோசம் இவ்விரண்டும் இந்தப் பூலோகத்தில் அழிவை அடைகின்றன. மனிதன் மரணமடைகிறான் என்றால் சரீரத்தைக் குறிக்கிறது. எதார்த்தமான மனிதன் ஆத்மா; அழிவற்றவன். அன்னமய கோசம் பிராணமய கோசம் இவற்றை விட்டு மனோமய கோசத்துடன் புவர்லோகம் சுவர்லோகம் செல்கிறான்.

ஆகையால் ஸ்தூல உலகத்தில் மனிதன் இருக்கையில் அவன் நினைக்கும் நினைவுகள், புவர், சுவர் லோகங்களில் நிகழ்வதுபோல் இறந்த பிற்பாடும் மனதானது மேற்படி உலகங்களில் வேலைசெய்கிறது. சாதாரணமாய் மனிதர்கள் நினைக்கிறபடி இறந்தவர்களுக்கும் பூமியில் உயிருடன் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுவதற்கு இடமில்லை. இவ்விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக [Reymond by Sir Oliverr Lodge Myers on Human Personality) என்கிற கிரந்தங்கள் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஆகாசதத்வம்.	சத்யலோகம்.	
வாயுதத்வம்.	1 தபோலோகம்.	ஆனந்தமயகோசம்.
	2 ஜனலோகம்.	
அக்னிதத்வம்.	1 மஹாலோகம்.	விக்ஞானமயகோசம்.
	2 சுவர்லோகம். 1	மனோமயகோசம்.
ஜலதத்வம்.	புவர்லோகம். 2	
பிருதிவிதத்வம்.	பூலோகம்.	பிராணமயகோசம். அன்னமயகோசம்.

மேலேகண்ட ஏழுலோகங்களும் (வெங்காயத்தின் தோல் போல்) ஒன்றுக்குள்ஒன்று அடங்கி இருக்கின்றன. அதேவிதமாகக் கோசங்களும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி இருக்கின்றன. சூட்சும உலகங்களும் ஸ்தூல உலகத்திலூடுருவி இருக்கின்றன. அவ்விதமே கோசங்களும்.

15. ஒருவன் செய்யும் எக்காரியத்தையும் பலர் அபேக்ஷையின்றி ஈசுவரகைங்கர்யமாய்ச் செய்து வருவானாகில், ஈசுவரன் அனுக்கிரகம்பெற்று இம்மையிலும் மறுமையிலும் சுகமடையலாம் என்ற விஷயம் கவனிக்கத்தக்கது. பரோபகாரமாய்ச்செய்யும் எக்காரியமும் ஈசுவரகைங்கர்யமென்றே கொள்ளலாம். ஒவ்வொருவ

னுக்கும் தான் செய்யும் செய்கைக்குப்பலன் வந்தேதீரும். சுயநலத்தைக்கோரி ஒரு காரியம் செய்வதைப்பார்க்கிலும் பரோபகார சிந்தையுடன் செய்தால் பலன் கிடைக்கிறதுமன்றியில் சித்தசுத்தியாய் ஞானம் பெறுவதற்கு இடமாய் இருக்கிறது. பரோபகார சிந்தையுடன் இப்பொழுது இந்தியாவில் வேலை செய்துவரும் மகாத்மா காந்தி என்ன, மிஸ்டர் லோகமான்ய திலகர் என்ன, ஸ்ரீமதி அன்னி பெஸண்டு அம்மையார் என்ன, காலஞ்சென்ற மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகேல் என்ன இவர்களைப்போலொத்த உத்தமர்களின் சரித்திரத்தை மாணுக்கர்களுக்கும் மாணவிகளுக்கும் அடிக்கடி எடுத்துரைத்து நல்ல நகரவாசிகளாக மேற்படியார்களைச் செய்வது தான் கல்வியின் பிரயோஜனமாகும். எவன் எத்தொழிலை வகித்தாலும் அதை ஈசுவர கைங்கர்யம் என்று செய்து வருவானுகில் ஸன்மார்க்கத்தைத் தவறிநடக்க ஏதுவிராது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

16. ஒவ்வொரு மாணுக்கரும் மாணவியும் எந்த மதத்தில் பிறந்தனரோ அந்த மதத்தின் கொள்கைகளை நன்ருய்ப்படித்தல் அவசியமென்றும், ஒருவன் தன்மதத்தைச் சரியாக அறிந்துகொண்டால் பிறர் மதத்தைத் தூஷிக்கக்காரணமிராதென்றும் விபரமாய் மாக்ஷிமை தங்கிய லார்ட் ஹார்டிஞ்சு பிரபு காசியில் இந்து சர்வகலாசாலைக் கட்டடத்தின் மூலசிலாநிவேசனம் செய்த காலத்தில் தெரிவித்திருக்கிருர். இதை எல்லாப்பாடசாலைகளிலும் கவனித்து அனுஷ்டித்து வரும்படியாகக் கடவுள் அருள்புரிவாராக.

ஓம் தத்ஸத்.

1918ஞு ஜனவரிமீ 7உ, ஆலங்குடி.

கே. எஸ். இராமச்சந்திரய்யர், பென்ஷன் தாசில்தார், புதுக்கோட்டை.

தொழில்வகை அறிதல்.

மானிட ஜன்மம் பெற்று அறிவு நிரம்பிய மனிதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் செய்யவேண்டுந்தொழில் இன்னதென்று முன்னமே திட்டஞ்செய்துகொண்டு அதற்குவேண்டிய அறிவை அடைதல் மெத்த ஆவசியமாம். எவரெவர்கட்கு எவ்வகைத் தொழில்களில் மனஞ்செல்லுகிறதோ அவர்கள் அவ்வகைத்தொழில்களிலேயே பயின்று பயனடைவதற்கு வேண்டிய அறிவைத்தேடிப் பெறவேண்டும். சிறுவர்கள் கல்வி பயிலும்பொழுதே பெற்றோர்கள் அச்சிறுவர்களது மனநோக்கங்களையும், விருப்பங்களையும் தக்கவாறு பரிட்சித்தறிதல்வேண்டும். சிறுவர்கள் இயல்பாகவே கல்வி கற்றுத்தக்கபருவமடையுங்கால், அவர்களது கருத்துகளும், மனோநோக்கங்களும் ஒவ்வோர் வகையான தொழிலின் பேரிலேயே பற்றுடையனவாகவிருக்கும். பெற்றோர்கள் இவ்வகைக் கருத்துகளையும் மனோநோக்கங்களையும் செவ்விதாக வுணர்ந்து தங்கள் சிறுவர்களை அவர்களது கருத்துகளுக்கும், மனோநோக்கங்கட்கும் தக்கவாறு தொழிற்றுறைகளிற் செலுத்தவேண்டும். "உத்தியோகம் புருஷலட்சணம்" என்ற ஆன்றோர் வாக்கின்படி தொழிலானது ஜனங்கட்கு மெத்த ஆவசியமாதலின், பெற்றோர்கள் தங்கள்சிறுவர்களைக் கல்விபயிற்றும் விஷயத்தில் மிகுந்த பற்றுடையவர்களாகவிருத்தல் வேண்டும். சிறுவர்களுடைய சுகதுக்கங்கட்குப் பெற்றோர்களே பாத்தியஸ்தர்களாதலின் தக்கதொழிலில் அச்சிறுவர்களது மனஞ்செல்லுமாறு அறிவையூட்டவேண்டிய பாத்தியதையை முதல் முதல் அப்பெற்றோர்களே கைக்கொள்ளவேண்டும். இளமையிற்பயின்ற கல்வி கேள்விகட்குத் தக்கவண்ணம் ஒருவருடைய தொழில்நோக்கமிருக்குமாதலின், பெற்றோர்களெனப் பெயரெடுத்திருப்பவர்கள் பலவகைத் தொழில்களையும் ஆராய்ந்து தெளிந்து தங்களுக்கு இஷ்டமான தொழில்களெவையோ அவைகளின் சுவையைத் தங்கள் சிறுவர்கள் உணர்தற்கேற்ற வழிகளை நாடவேண்டியது கடமை. பெற்றோர்கள் இங்ஙனம் செய்யாது, தங்கள் மக்களை அவர்கள் மனம்போனவாறு கல்வித்துறைகளிலாழ்த்தி, தொழிலென்பது இத்தன்மையதெனக்கவனியாதிருப்பரேல்; அம்மக்கள் இளமைப்பருவம்

நீங்கி முதுமைப்பருவம் அடையுங்கால், அவர்கள் சிறுவயதிற் கற்றுணர்ந்த கல்வியின் வலிமையும் நோக்கமும் எத்தன்மையனவாக விருக்கின்றனவோ அத்தன்மையாகவே அவர்களது தொழில் வலிமையும் நோக்கமுமிருக்கும். சிறுவர்கள் இவ்வாறு நிலைமையை யடையும்பொழுது பிள்ளைகளுடைய மனம் பெற்றோர்கட்கொவ்வாமலும், பெற்றோர்களுடைய மனம் பிள்ளைகட்கொவ்வாமலும் ஒருவருக்கொருவர் மாறுபட்டொழுகுந்தன்மையுடையவர்களாக ஆகின்றார்கள். ஆகையால் தொழில் வகைகளைச் செவ்விதாகவுணர்ந்து தங்கள் இனத்துக்கும் மனத்துக்கும் ஒத்த தொழில்கள் எவையுண்டோ அவைகளைச் சிறுவர்கள் நாடுவதற்கேற்ற வழிகளையும், விதிகளையும் முதல் முதல் பெற்றோர்கள் அநுசரித்து நடக்கவேண்டியது முக்கிய கடமையாம்.

இங்ஙனம்
சி. ரு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

பலகுறிப்புகள்.

அமெரிக்காவில் சாராயவகைகளைச் செய்தல் கூடாதென்று ஒரு சட்டமேற்பட்டிருக்கின்றது. அதனால் 236-சாராயமிறக்கும் சாலைகளும், 992-நுரைமது இறக்கும் சாலைகளும், 3,00000-சாராய வகைகளை உபயோகப்படுத்தும் சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. இத்தொழிலைச் செய்துவந்தவர் ௵ 1-க்கு 1,40,00000-பவுன் நஷ்டமடைகின்றனர். இச்சட்டத்தினால் கவர்ன்மெண்டாருக்கு ௵ 1-க்கு 200,000,000-நஷ்டமாகின்றது. இப்பெரிய நஷ்டத்தைப் பாராமல் அமெரிக்கக் கவர்ன்மெண்டார் தம் குடிகளின் க்ஷேமத்தைக் கருதி, மதுவின் உற்பத்தியையும், விற்பனையையும் தடுத்திருக்கின்றனர். இந்திய அதிகாரிகள் இந்துக்களின் க்ஷேமத்தைக் கருதாது வருமானம் ஒன்றையே கருதியிருக்கின்றனர்.

"கல்கத்தா" என்ற கப்பலில் பெஸ்டு கம்பெனிக்கு 1,13,000 மூட்டை (9000) டன் தானியம் (முக்கியமாக நெல்லும் அரிசியும்) இம்மாதம் 12௳ வந்தது. இத்தத்தானியம் ராஜதானி எங்கும் அனுப்பப்படும்.

உ

சுலக்ஷணை.

(௰௧-ம் தொகுதி முதல் பகுதி ௨௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

"உனக்கு ஆச்சரியமாயிருக்கிறதா? உன்னுடைய கட்டளைப்படி அனுப்பிசகாமல் நான் நடக்கவில்லையா"? என்று சூடாமணி அவளை வியப்போடு உற்றுப்பார்த்துக்கொண்டு சொன்னான்.

சுலக்ஷணை—கொஞ்சம் ஆச்சரியத்தோடு சொல்லுகிறாள், "நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை, இன்று காலையில் நடந்ததைப்பற்றிய சமாசாரம் என் காதிற்கு எட்டிற்று. ஆகையால் ஒருவேளை உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கலாம் என்றுதான் நான் நினைக்க வேண்டியிருக்கிறது".

சூடாமணி—தான் இருந்த நாற்காலியை விட்டு எழுந்து மிகவும் கோபத்துடன் சொல்லுகிறான், "நீ என்னை இப்படியா நடத்துகிறாய்? நான் கொஞ்சம் பரபரப்பாய்க் காணப்பட்டாலும் உன்னைப்பற்றி ஒன்றும் வேலைக்காரர்களிடம் சொல்லிவிடவில்லை. மேலும் நான் உன்னைத் தேடிவந்ததாக அவர்களுக்குத் தெரியக்கூடாது என்று நினைத்து, முதலில் மதிமான் இருக்கிறானா என்று விசாரித்துப் பிறகு அவன் போயிருக்கிற இடம் உனக்குத் தெரிந்திருக்கலாம் என்று சொல்லிவிட்டு உன்னிடம் வந்தேன்".

சுலக்ஷணை—மெதுவாய் எழுந்திருந்து விறைப்பாய் நின்றுகொண்டு சூடாமணியை உற்றுநோக்கிச் சொல்லுகிறாள், "வேலைக்காரர்களிடம் என்னைப்பற்றிச் சொல்லுகிறதா! நீ பேசுவது ஒன்றும் அர்த்தமாகவில்லை. உன் சகோதரி என்மகனுக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறபடியால், உன்னிஷ்டப்படி இந்த வீட்டிற்கு வரலாமென்றும், நீ நினைத்தபோது என்னுடைய அறையில் நுழையலாமென்றும் எண்ணுகிறாயா"?

அவள் பேசினபொழுது சூடாமணி பிரமை கொண்டவனைப் போல் நின்றான். பேசி முடிந்ததும் அதிக கோபத்தோடு அவன் சொல்லுகிறான், "உன்னுடைய நடத்தை முற்றிலும் வெறுக்கத்தக்கதாயிருக்கிறது".

"நீ என்னை இப்படியா பேசுகிறாய்"? என்று சொல்லிச் சுலக்ஷணை வேலைக்காரர்களைக் கூப்பிடுவதற்காகக் கட்டப்பட்டிருந்த மணியை அடிக்கக் கையை நீட்டினாள்.

சூடாமணி—"மணியை அடிக்காதே, மீறி நடந்தால் சத்திய மாய் நான் உன்னைக் கொல்லுவேன்".

சுலக்ஷணு—"இன்று காலையில் நடந்த சம்பவம் உன் அறிவை மயக்கிவிட்டது. ஆகையால் நான் உன்னைக் கடுமையாய் நடத்தக் கூடாது", என்று சொல்லி அவள் மறுபடியும் உட்கார்ந்தாள். நின்றுகொண்டு அவளைச் சற்றுநேரம் பார்த்துவிட்டுச் சூடாமணியும் உட்கார்ந்தான்.

சூடாமணி—"இன்று காலையில் நடந்த சம்பவத்தைப்பற்றி நீ சொன்னுயே, அதற்கும் உனக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்று நீ என் முகத்தை நேரே பார்த்துக்கொண்டு சொல்லுவாயா"?

சுலக்ஷணு—"நீ சண்டையில் ஒருவனைக்கொன்றதில் எனக் குள்ள சம்பந்தமென்ன"?

மாறுவேஷம் போட்டுக்கொள்ளும்படி தனக்கு வந்த கடிதத்தை எடுத்துக்காட்டி, "இது உனக்குத் தெரியுமா"? என்று சூடாமணி கேட்டான்.

சுலக்ஷணு—"என்ன கேள்வி? உன்னுடைய கடிதப் போக்கு வரத்தைப்பற்றி எனக்கென்ன தெரியும்"?

"அப்படியானல் இதுவும் உனக்குத் தெரியாதுபோலும்," என்று சொல்லிச் சூடாமணி ஒரு பெயர் மாத்திரம் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துக்காட்டினன். அந்தப்பெயர் என்னவென்று அறிய நம் வாசகர்களுக்கு ஆவலாயிருக்கலாம். அதில் எழுதியிருந்த பெயர் சிந்தாமணி.

சுலக்ஷணு—"நான் உன் பேச்சைக் கேட்டு அலுத்துப் போனேன். இந்தப் பத்து நிமிஷங்களாய் உன் புத்திமாறுட்டத்தை உத்தேசித்து உன்மேல் இரக்கங்கொண்டு சும்மாவிருந்தேன்".

சூடாமணி—அதிக முயற்சிசெய்து தன் கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு சொல்லுகிறுன், "சுலக்ஷணு, என்னை இவ்வித

மாய் நடத்தவேண்டுமென்பதா உன் கருத்து? உன் எண்ணம் நிறைவேறாது. ஒரு ஸ்திரீ என்னை அவளுடைய வேலைக்காக உபயோகப்படுத்தி வேலை முடிந்ததும் தள்ளிவிடுகிறதா? அது ஒருபோதும் முடியாது. நீதான் எனக்கு இந்தக் கடிதத்தை எழுதினாய். இந்தக் கூட்டின் உட்புறத்தில் ஒரு பெயரை மாத்திரம் எழுதினதும் நீதான். இரண்டாயிரம் ரூபாய்க்கு நோட்டு அனுப்பினதும் நீதான்".

சுலக்ஷணை—"உன் சிநேகிதர்கள் உன்னைப் பைத்தியம் பிடித்தவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரி (Hospital) யில் கொண்டுபோய் வைக்கவேண்டும்".

சூடாமணி—"உன்னைப்போன்ற பக்காப்பேர்வழிகளான ஸ்திரீகளை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. என்னை மாறுவேஷம் தரித்துக்கொண்டு வரச்சொன்னதும், உன்னுடைய விரோதியைக் கொல்லச்சொன்னதும், விரோதியின் பெயரைக் கூட்டின் உட்புறத்தில் எழுதினதும் நீ யல்லவென்று சொல்லுகிறாயா? பெயர் மாத்திரம் எழுதியிருந்த கடிதம் வரும்வரை மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்த ஸ்திரீ யாரென்பது எனக்குத் தெரியாமலிருந்தது. ஆனால் அக்கடிதம் வந்தவுடன் அந்த ஸ்திரீ நீதான் என்று அறிந்துகொண்டேன். உன்னை நான் தெரிந்துகொள்ளமாட்டேனென்று நினைத்தாயா? உனக்கும் சிந்தாமணிக்கும் நடந்த விஷயம் ஊரெங்கும் பரவியிருக்கிறதே. சிந்தாமணிக்கு விரோதி உன்னைத்தவிர வேறொருவரும் இல்லை. ஆகையால் அவனைக் கொல்லவேண்டுமென்று என்னைத் தூண்டியவள் நீதான். நான் சத்தியமாய்ச் சொல்லுவேன்".

சுலக்ஷணை—"நீ என்ன நினைத்துக்கொண்டு இவ்வாறு பேசுகிறாய் என்று அறிவதற்காகத்தான் நான் இந்நேரம் பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் தெரியவருகிறது. நீ யாரோ ஒரு ஸ்திரீயால் ஏமாற்றப்பட்டிருக்கிறாய். ஆள் தெரியாமல் என்னை வந்து பிடிக்கிறாய்".

சூடாமணி—"இல்லை, அது அப்படியல்ல. உன் விரோதியின் பெயர் இன்னதென்று தெரிந்ததன் பிறகுதான் நீ இன்னாரென்று

அறிந்தேன். நீ அந்த ஸ்திரீயவ்வளவு உயரந்தான் இருக்கிறாய். மாணகாலத்தில் கேட்டால்கூட என்னைக் கொலைசெய்யும்படி தூண்டிய ஸ்திரீ நீதானென்று சொல்லுவேன்".

சுலக்ஷணை—" உனக்குச் சித்த சுவாதீனம் இல்லையென்று நான் உறுதியாய் நம்பாவிட்டால் உன்னை இவ்வாறு பேசவிட்டிருக்கமாட்டேன்".

அவள் பேசியமாதிரியைப் பார்த்த சூடாமணி சற்றுத்தயங்கினன். பிறகு மிகவும் உக்கிரமான பார்வையுடன் அவள் சொல்லுகிறான், "சுலக்ஷணை, உனக்காக நான் கொலையாளியானேன். அந்த வாலிபனுடைய கொலை என்னைத் துன்புறுத்துகின்றது. நான் செய்த காரியமும் அதற்காக நான் இப்பொழுது படும் வருத்தமும் ஏராளமான வெகுமதியை அடையத்தக்கன. அந்த வெகுமானத்தை நீ கொடுப்பதாக வாக்களித்தாய். இப்பொழுது கொடுக்கவேண்டும். நீ என்னைக் காதலிப்பதாகச் சொன்னது பொய்யாயிருக்கலாம். நான் என்னுடைய மூடத்தனத்தினால் அதை அப்பொழுது நம்பினேன். ஆனால் யார் நம்பாமலிருக்கமுடியும். ஒரு ஸ்திரீ இவ்வளவு மோசக்காரியாயிருப்பாளென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆகையால் நான் அப்பொழுது நீ சொன்னதை நம்பினேன். நம்பியிராவிட்டால் உன் கட்டளைப்படி நடந்திருக்கமாட்டேன். சிந்தாமணியைச் சண்டைக்கு இழுத்து அவனைக் கொலை செய்திருக்கமாட்டேன். நீ என்னை உண்மையில் நேசித்திருந்தால், நான் உனக்காகச்செய்த காரியத்திற்கு அது கூலியாகவாவது இருக்கும். என்னை நீ உண்மையில் காதலிக்காமல் ஏமாற்றியிருந்தால், உன்னைத் தண்டிப்பதற்காக உன் வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்கிறேன்".

சுலக்ஷணை—" இந்த நிமிஷத்தில் என்னுடன் கூட இருப்பவன் சித்தப்பிரமை கொண்டவன் என்று எனக்கு விளங்குகிறது. அவன் சொல்லுவதைப் பொறுமையாயும் அன்பாயும் கேட்டுக்கொண்டிருப்பதின் காரணம் அவன் பேரில் உண்டாகிய இரக்கந்தான்".

சூடாமணி—" இரக்கமா? என்னிடத்தில் நீ இரக்கப்படவேண்டிய அவசியமில்லை. சுலக்ஷணை, என்னைப்பார். நான் இப்பொழுது

என்ன செய்வேனென்று எனக்குத் தெரியாது. சிலமணி நேரத்திற்குள் நான் முற்றிலும் மாறிவிட்டேன். இதுவரை நான் குடிகாரனுகவும், காலியாகவும், மிதமிஞ்சிச் செலவழிப்பவனுகவும் மாத்திரம் இருந்தேன். இப் பொழுது பெருங்குற்றவாளியாகவும் ஆகிவிட்டேன். நான் செய்த குற்றத்திற்காக என் மனச்சாக்ஷியானது என்னை ஓயாமல் வருத்திக் கொண்டேயிருக்கிறது. இந்த வருத்தத்தை நான் எப்படி ஒழிப்பது? நல்ல சாராயத்தாலும் ஸ்திரீகளாலும்தான் அதை ஒழிக்க முடியும். நீதான் அதற்குத் தகுதியான ஸ்திரீ. உன் வாக்குறுதியின்படி நடக்கிருயா? இல்லையா?"

சுலக்ஷணு—தலையை அசைத்துக்கொண்டு சொல்லுகிருள், "பரிதாபகரமான வாலிபனே! உன்கதி என்னுகும்? உன்னை எனக்கு வெகுகாலமாய்த்தெரிந்திருப்பதனுலும், நீ என் மகனுடைய அத்தியந்த சினேகிதனனபடியாலும், அவனுக்கு நீ மைத்துனனுகப் போகிறபடியாலும், என் சினேகிதியான நீலாம்பாளின் அண்ணன் மகனனபடியாலும், உன்னுடைய நிலைமையைப்பார்த்து நான் அதிக வருத்தத்தையடைகிறேன். மேலும், காலையில் நடந்த காரியத்திற்காக நீ அதிக வருத்தப்படுகிறதாகத் தெரிகின்றது—"

தன் முகத்தில் கோபத்தோற்றத்தோடு சூடாமணி சொல்லுகிருன், "இவ்விதமாக நீ என்னிடம் பேசாதே. எனக்கு இதுவரை பைத்தியம்பிடியாமலிருந்தாலும், இப்பொழுது நீ என்னைச் பைத்தியம் கொள்ளச் செய்துவிடுவாய். சத்தியமாய் நீ கம்பீரமான அழகுடன் கூடி இருக்கிருய். நீ அதிக அழகுவாய்ந்தவள் என்றுதான் நான் எப்பொழுதும் நினைத்திருந்தேன். நேற்றுக்காலையில் மாறுவேஷம் தரித்துக்கொண்டு வந்த ஸ்திரீ யாரென்று தெரிந்துகொண்ட நிமிஷம் முதல் நான் உன்னைப்பற்றியே தியானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது இருக்கிறதுபோல் இவ்வளவு அழகாய் நீ ஒருவருக்கும் காணப்பட்டிருக்கமாட்டாய். நன்றியறிதலில்லாமலும், ஏமாற்றுதலாயும், முற்றிலும் வெறுக்கத்தக்கதாயும் நீ என்னிடத்தில் நடந்துகொண்டபோதிலும், உன்மேல் எனக்கு ஏற்பட்ட மயக்கம்

நீங்கவில்லை," என்று சொல்லிவிட்டு அவன் பைத்தியக்காரனைப் போல் சிரித்தான்.

"போதும், நீ போய்வரலாம்," என்று சொல்லிச் சுலக்ஷணை எழுந்திருந்தாள். அவள் வெளிக்கு அமைதியாய்க் காணப்பட்ட போதிலும், மனதில் திகிலடைந்திருந்தாள்.

சூடாமணி—" உண்மையில் என்னை இவ்வாறு நடத்தவேண்டுமென்பது உன்னுடைய உத்தேசமா? ஸ்திரீயே! உனக்காக நான் கொலையாளியானேன். மாறுவேஷம் தரித்துக்கொண்டு வந்த ஸ்திரீ நீதானென்று தெரிந்தபடியால் சண்டையைப்பற்றி ஒருவார்த்தைகூட உன் மகனுக்குச் சொல்லவில்லை".

சுலக்ஷணை—" இனிமேல் ஒரு நிமிஷங்கூட நீ இங்கே நிற்கக் கூடாது".

சூடாமணி—"நான் இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டேன்," என்று சொல்லி, சுலக்ஷணையைத் தழுவுவதற்காகக் கைகளை நீட்டிக் கொண்டு அவள்மேற் பாய்ந்தான். அவள் அவன் கைக்கு அகப்படாமல் கதவைநோக்கி ஓடினாள். அதே சமயத்தில் திடீரென்று கதவு திறக்கப்பட்டு, வயது சென்றவளான கமலினி என்னும் தாதி கோபத்தினால் சிவந்த முகத்தோடு உள்ளே நுழைந்தாள்.

கமலினியின் கோபத்தைக் கவனியாதவள்போலச் சுலக்ஷணை சொல்லுகிறாள், "கமலினி, இந்தப் பைத்தியக்காரனிடமிருந்து என்னைக்காப்பாற்று.

"என்ன! இன்று காலையில் சிந்தாமணியைக்கொன்ற சூடாமணி! அவன் இங்கேயா வந்திருக்கிறான்!" என்று சொல்லிவிட்டுக் கமலினி அதிக ஆச்சரியப்பட்டாள்.

சூடாமணியின் நீட்டிய கைகள் மடங்கின. என்ன செய்வதென்று தெரியாமல் அவன் கொஞ்சநேரம் தயங்கினான். தன் காரியம் இப்பொழுது சாத்தியமாகாது என்று கருதினான். ஏதாவது கலகம் உண்டானால், சிந்தாமணியைக் கொன்ற குற்றத்திற்காகத் தன்

னைப் போலீஸ்காரர்கள் பிடித்து அடைத்துவிடுவார்கள் என்ற எண்ணம் அவன் மனதில் உதித்தது. ஆகையால் அவன் சுலக்ஷணை வண்டைபோய், "சீக்கிரத்தில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம்," என்று இரகசியமாய்ச் சொல்லிவிட்டு, அறையிலிருந்து வெளியே நடந்து வீட்டைவிட்டுச் சென்றான்.

"நீ வந்தது எனக்கு அதிர்ஷ்டமாய் முடிந்தது. அதற்காக நான் உனக்கு வந்தனமளிக்கிறேன்," என்று சுலக்ஷணை கமலினியின் கோபத்தை ஒருவாறு தணிக்கவேண்டிச் சொன்னாள்.

கமலினி, "நீ எனக்கு வந்தனமளிக்கவேண்டிய அவசியமில்லை. நான் அதற்காக வரவில்லை. இங்கு நடந்த விஷயம் எனக்கு எப்படித் தெரியும்? இந்தச் சமயம் தாங்கள் துரதிர்ஷ்டமுள்ளவர்களாகக் காணப்படுகிறீர்கள். எல்லோரும் தங்கள்மேற் காதல்கொண்டு தங்களைத் தொந்தரவு செய்கிறார்கள். முதலில் கொலை செய்யப்பட்ட சிந்தாமணி தொந்தரை செய்தான். இரண்டாவது அவனைக்கொன்ற சூடாமணி வந்திருக்கிறான். வாஸ்தவத்தில் இது ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் நான் அதற்காக வரவில்லை. நாளுக்கு நாள் எனக்கு அதிகமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. வேலைக்காரர்கள் எனக்கு மரியாதை செய்யவில்லை".

சுலக்ஷணை—"இப்பொழுது என்ன நடந்தது கமலினி?"

கமலினி—"சமையற்காரி நான் சொல்லுகிறபடி கேட்கமாட்டேனென்கிறாள். உக்கிராணக்காரனைத் தாகத்திற்குக் கொஞ்சம் சர்பத்துக் கேட்டேன். அவன் கொடுக்கமாட்டேனென்கிறான். அந்தக் கழுதைப்பயல் மதிமானும், பட்டி முண்டை விமலாவும் என்னிடத்தில் நடந்து கொள்ளுவதைப் பார்த்து வேலைக்காரர்களும் என்னை அப்படியே நடத்துகிறார்கள். ஆனால் நான் இனிமேல் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டேன், இப்பொழுது சரியான ஏற்பாடு செய்து கொள்ளப்போகிறேன்".

சுலக்ஷணை—"என்ன ஏற்பாடு செய்து கொள்ளப்போகிறாய்?"

கமலினி—"தாங்கள் இப்பொழுது வேலைக்காரர்களையெல்லாம் கூப்பிட்டு அவர்கள் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கட்டளையிடவேண்டும்".

சுலக்ஷணை—"நல்லது, கமலினி, எல்லாம் உன்னிஷ்டப்படியே நடக்கும். வேலைக்காரர்கள் இப்பொழுது உனக்குக் கீழ்ப்படிய வில்லை என்பது வாஸ்தவந்தான். அவர்களெல்லோரையும் கூப்பிட்டு உன்னை நேரில் வைத்துக்கொண்டு உன்மனம் திருப்தியடையுமாறு நான் அவர்களுக்குக் கட்டளையிடுகிறேன். இப்பொழுது இரவுமணி பதினொன்றரையாகின்றது. வேலைக்காரர்களில் சிலர் இந்நேரம் படுத்திருப்பார்கள். ஆகையால் காலைக்காலையில் காலைப்போஜனமானதும் உன்னிஷ்டப்படி செய்கிறேன்".

"நல்லது. தாங்கள் சொல்லியபடியே ஆகட்டும்," என்று கமலினி திருப்தியடைந்தவளாய்ச் சொன்னாள்.

சுலக்ஷணை—"நீ படுக்கப்போ".

கமலினி—"நான் இன்று கவலையற்று நன்றாய்த் தூங்குவேன்".

சுலக்ஷணை—"நீ அவசியம் நன்றாய்த் தூங்குவாயென்று நம்புகிறேன்".

அந்த வயது சென்ற தாதி அறையைவிட்டு வெளியே சென்றாள். அவள் போனதும் சுலக்ஷணையினுடைய முகம்மாறி அதில் ஒருவிதமான கோரத்தோற்றம் உண்டாயிற்று. அத்தோற்றமானது பார்க்கப் பயங்கரமாயிருந்தது.

இரவு பன்னிரண்டு மணிக்கு வீட்டிலுள்ளோர் யாவரும் படுத்துவிட்டார்கள். மதிமான் வீட்டிலில்லை. அவன் முதலிற் பாலாமணி வீட்டிற்குப் போனநாள் முதல் வீட்டிற்குப் படுக்கவருவதில்லை. ஒரு மணிக்கு எங்கும் நிச்சப்தமாயிருந்தது.

(தொடரும்)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ஸ்ரீராமஜயம்.

(A portion taken from the book "குருசிஷ்யர்" under preparation).

Religious Training in Schools.

பள்ளிக்கூடத்து மதஸம்பந்தமான பயிற்சி.

இம்மத ஸம்பந்தமான பயிற்சி, பொதுப்பட ஜனசமுகத்தாரால் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயங்களைப்பற்றி விஸ்தரித்து எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு விஷயமில்லை. என்றாலும் மத விஷயங்களில் அவ்வளவு அக்கரை காட்டுகிற இந்தியர்களாகிய நம்மவர்களுக்கு ஒரு வித்யாவிஷயக் கோட்பாடே.

இவ்வித மத ஸம்பந்தமான படிப்பில்லாத படிப்பை முற்றிலும் பூர்த்தியில்லாத படிப்பென்றே சொல்லவேண்டும். அவ்விதமான படிப்பானது, நாளடைவில் மதக்கோட்பாட்டையும் அத்துடன் ஏற்பட்டிருக்கிற சில பக்தியான பழக்கவழக்கங்களையும் தொலைத்து, மத ஸம்பந்தமான ஸன்மார்க்கத்தைக் கொடுக்கக்கூடிய பலமான ஆதாரவையும் இழக்கச் செய்யக்கூடிய படிப்பாக ஏற்பட்டுவிடும். நம்முடைய முறைகள், மதம் ஸம்பந்தப்பட்டமட்டில் ஸன்மார்க்கத்திற்கு ஒரு ஆதாரவாயும், அனுமதியாயும், மட்டில்தான் இருக்கின்றன. மதத்தின் ஓர் பாகமாகக் கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்கள் ஸன்மார்க்க மதிப்பிற்குத் தக்க இடமுள்ளன. ஒழுங்கான மதக் கோட்பாட்டின் அறிவிற்கு மூலாதாரமாக ஏற்படக்கூடிய விதமாக இல்லை.

இந்த விஷயத்திலுள்ள கஷ்டம் என்னவென்றால், அனேகவித மதக்கோட்பாடுகள் ஆங்காங்கு அமைந்திருப்பதால், வேற்றுமை உணர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய பயமானது அவ்விஷயத்தையே அசட்டை செய்கிறதும் ஒரு குழந்தையாவது தான் எதிர் பார்க்கக் கூடிய ஒரு பாக்யதையை அடைந்திருக்கிற விஷயத்தை அவர்களுக்குப்புகட்டாமல் தவறிவிடவும் செய்துவிடுகிறது.

ஆகையால் பற்பல மதக்கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடன்னியில் மதவுணர்ச்சி பிள்ளைகளிடத்தில் பரவிக்குடிகொண்டிருக்க வழிகள் கண்டுபிடிக்கா. ஒரு பொதுவகை ஏற்பாடு அமைக்க வேண்டுவதுதான், தற்காலத்திலுள்ள பெரிய காரியம். ஒரு மதத்தை எல்லா ஜனங்களும் பொதுப்பட அங்கீகாரம் செய்யும்வரை காத்திருப்பது கடலில் அலை ஓய்ந்து ஸ்நானம் செய்யக் காத்திருப்பதை ஒக்கும்.

மதமென்பது இவ்வுலகத்துக்கப்பால் ஓர் கர்த்தா இருப்பதாகவும் அவர் இதைப்பார்த்துக் காப்பவரென்றும், மனிதன் தன்னுடைய ஜீவ்யத்தைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டியது அவர் ஏற்படுத்திய நிலைவரமான சட்டதிட்டங்களுக்குத் தக்கபடியென்றும், ஆகையினாலே அவருக்கு மனிதன் தான் செய்கிற கார்யங்களில் ஜவாப்தாரியாவானென்ற ஓர் நம்பிக்கையுந்தான். ஒரு மத பக்தியுள்ளவனென்று சொல்லப்படுகிறவன் யாரென்றால் அவனிடத்தில் ஈஸ்வரன் இருக்கிறார் என்ற நம்பிக்கை விசேஷமாய்க் குடிகொண்டிருக்கும். அந்த நம்பிக்கைக்குத் தகுதியாகத் தன்னுடைய ஜீவியத்தையும் செய்கைகளையும் வெகு ஜாக்ரதையாக ஒழுங்கு படுத்திக் கொள்வான். இந்த ஸ்வாமியின் சுபாவத்தை வரையறுத்துப் பேசும்படி வரும்பொழுது பற்பல மதக்கோட்பாடுகளும் மதபோதனையும் ஏற்படுகின்றன. ஒரு குறித்த மதக்கோட்பாடானது பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படும்பொழுது வேறுவிதமான கொள்கைகளை வைத்து அனுஸரிக்கிறவர்களுக்கு அப்படிப்புச் சரிப்படுகிறதில்லை.

விவேகத்திற்கு இன்றியமையாத ஆவஸ்யமாக மத நம்பிக்கை பள்ளிக்கூடக் காலம் முடியும்வரை சாதாரணமாக ஒரு மனுஷ்யனுடைய ஜீவ்யத்தில் ஏற்படுவதில்லை. வாலிபர்களுக்கு மதத்தை ஒரு பிரமாணமாகக் கற்பிக்கலாமேயொழிய ஒரு ருசுவாகவாவது அல்லது தர்க்கமாகவாவது போதிக்கமுடியாது. அவர்கள் ஸன்மார்க்க விஷயத்திற்கும் ஜீவ்யத்திற்கும் போதுமான அளவு அதனுடைய அம்ஸத்தை அறிந்துகொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

மதத்திற்கும் ஸன்மார்க்கத்திற்கும் சம்பந்தம் அடியில் வருமாறு. அநுஷ்டானத்திலிருக்கிற ஸன்மார்க்கப்பிரமாணம் பற்பல ஜனசமூகங்களிலும், ஒரே ஜனசமூகத்திலுண்டான பற்பல அங்கங்களிலும் மாறுதலே அடைகின்றன. நம் இந்தியாவிலிருப்பது போல மதங்கள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்குமிடங்களில் இவ் வித்யா விஷயங்கள் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றன

வார்த்தைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஸன்மார்க்க விதிகள் மிகவும் திருப்திகரமாய்த்தான் அநுஸரிக்கப்படுகிறது. நம்மைக் கட்டுப்படுத்துவதாக நினைக்கப்படுகிற அனேக வழக்கங்கள் உண்மையிலேயே ஸன்மார்க்க சம்பந்தமல்ல; வேறு சங்கதிகளைச் சார்ந்ததாகப் போய்விடுகிறது.

இவைகளுடைய பலன் என்னவென்றால், ஒரு பையன் வயது வந்து தனக்குத்தானே ஆலோசித்துப் பார்க்கக்கூடிய ஸ்திதியில் வருங்காலையில் அவரைத் தான் முதல் முதல் நினைத்திருந்த பிரகாரம் அவ்வளவு முக்யமான மனுஷன் அல்லவென்றும் நினைக்கிறான். இன்னும் மேற்பட்ட ஒரு கர்த்தாவினுடைய சுயமான ஸன்மார்க்கப் பிர்மாணங்கள் போதிக்கப்படாவிட்டாலும் மனிதர்கள் பண்ணுகிற பற்பல அங்கங்களுக்கும் அப்பிரமாணம் புறம்பானதென்று அறிந்துகொள்ளும்படி பயிற்றுவிக்கப்படாவிட்டாலும் எல்லா விஷயத்திற்கும் அச்சட்டமே மூலகாரணமும் முடிவுமென்று பயிற்றுவிக்கப்படாவிட்டாலும் அதனுடைய மகத்வம் துர்ப்பலமடைந்து எல்லாரும் அநுஸரிக்கப்படவேண்டிய ஒரு சட்டமாகப் பாவிக்கப்படாமல் அவனவன் இஷ்டம்போலும் சௌகர்யம்போலும் உபயோகத்துக்குத் தக்கவிதமுமென்று பாவிக்கப்படும். ஆகையால் தான் ஸ்வாமி இருக்கிறார் என்ற நம்பிக்கை எங்கேயுண்டோ அங்கே ஸன்மார்க்கச் சட்டமானது அவருடைய சித்தத்தின் அம்சமென்றே பாவிக்கப்படவேண்டும். மனிதனுடைய ஸன்மார்க்கச் சட்டத்தின் குறைபாடுகள் முற்றிலும் கட்டுப்படுத்துகிற ஈஸ்வர ஸன்மார்க்கச் சட்டத்தை மறுக்கக் காரணத்தை ஏற்படுத்தமுடியாது. அல்லது சொல்லப்பட்ட ஒருவித மதஸம்பந்தமான கடமைகள் ஸன்மார்க்கக்

கோட்பாடுகளினின்றும், தன் ஞாபகத்தை அகற்ற ஏற்படமாட்டாது. மதமும் ஸன்மார்க்கமும் ஒன்றோடொன்று நன்றாய் இணைக்கப்பட்டிருக்கின்றன. வாலிபர்கள் கற்கவேண்டிய மதஸம்பந்தமான படியாவது, கடவுள் ஒருவர் உண்டென்பதும், நேர்மையும், நன்மையும் அவருக்குப் பிரீதியானவையென்றும், அறிவதுதான்.

இந்தப் பாடங்கள் வெகு சுலபமாய்க் கற்பிக்கப்படுகின்றன. வாலிபர்கள் பாவனாசக்தியாலும் குறுக்குப்பாடான நினைப்பூட்டுதலாலும் அடையக்கூடிய சில நிலைகளின் பலாபலனைத் தன்னுடைய சொந்த நிலையினால் உபாத்யாயர் குறுக்குப்பாடாகவும் ஸ்வாமியானவர் யாவற்றுக்கும் மூலாதாரமென்றும் ஸன்மார்க்கப் பிரமாணத்திற்கும் மூலகாரணமென்றும் நேரில் போதிப்பதாலும் ஸ்வாமியின் ஞாபகத்தைப் பக்குவப்படாத வாலிபர்கள் மனதில் இடைவிடாமல் புகட்டக்கூடுமாயின் அனேகமாய் அதுமதஸம்பந்தமாகத் தன்னையறியாமலே அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். இப்போதனையில் முக்ய அம்சம் மரியாதைக் கிரம உணர்ச்சியின் ஊக்கந்தான். உபாத்யாயர் ஈஸ்வரனுடைய பெருமையையும் மகத்வத்தையும் அவர் ஸந்நிதியில் தான் திரணமென்றும் தானே நேரில் உணருவதாகவும் ஆனால் தெய்வத்தினிடத்தில் ஓர் நம்பிக்கை தனக்கு இருக்கிறதென்றும் ஓர்விதமாய்ப் பிள்ளைகளுக்குக் காண்பிக்க நடந்துகொள்ளவேண்டும். ஸ்வாமியினிடத்தில் அவமரியாதையாய் நடக்கிற விஷயங்களையாவது ஈஸ்வரனுடைய நாமத்தை அசட்டையாய் உச்சரித்தலையாவது கண்டால், உடனே தடுக்கவேண்டிய சிரத்தையையும் எடுத்துக்கொள்ளவேண்டும். மதமானது ஸன்மார்க்கத்திற்கு ஓர் ஆதாரவாக ஏற்படும். மதிப்பானது தெய்வத்தின் பெருமையிலும் மனிதனுடைய சிறுமையிலும் முற்றிலும் சார்ந்திருக்கிறது. ஒரு பள்ளிக்கூடத்தில் மதவுணர்ச்சி உபாத்யாயருடைய மாதிரியினாலும், பள்ளிக்கூடக் கௌரவத்தினாலுமேயொழிய விவேகமுள்ள மத அப்யாஸம் பிரஸங்கங்களால் உண்டாகத் தகுதியான குறித்த மதப்பாடங்களினால் அல்ல.

சந்தர்ப்பம் ஏற்பட்டால் இவ்விதக் குறுக்குப்பாடான போதனையானது ஸ்வாமியினிடமே யாவரும் சார்ந்திருக்கும் என்பதையும்

தெரிவிக்கக்கூடிய ஒரு விசேஷ செய்கையினாலும் அபிவிர்த்தி செய்யப்படலாம். அதற்குத் தகுதியான மார்க்கம் ஒவ்வொரு நாட்பாடத்தையும் ஈஸ்வரப்பிரார்த்தனையுடன் ஆரம்பிப்பதும் முடிப்பதுமாம். ஸ்வாமியினுடைய பொதுப்படையான பெயரை ஜெபத்தில் உபயோகித்தால் யாதொருவருக்கும் மன ஆயாஸமின்றி ஜெபம் நடந்தேறிவரும். ஜெபம் நடக்கும் காலையில் பிள்ளைகள் ஒழுங்காயும் பக்தி சிரத்தையுடன் கண்களை மூடிக்கொண்டு இருக்கக் கற்பிக்கப்படலாம். உபாத்யாயர் ஜெபங்களை மெதுவாயும், மரியாதை வினயத்துடனும் செய்யவேண்டும். அதே காலத்தில் இந்த ஜெபத்தை வேறு எவ்விதமாயாவது செய்தால் அது பிள்ளைகளுக்கு நன்மை பயக்காமல் கெடுதலை விளைவிக்கும் என்பதையும் திண்ணமாய் எண்ணவேண்டும். விருப்பமானால் இந்த ஜெபத்தைப் பகுதி பகுதியாக உபாத்தியாயர் சொன்னவுடனுக்குடன் பிள்ளைகளும் சொலனும்படி செய்வித்துக் கடைசியில் சொல்லப்பட்ட ஜெபத்தைத் தாங்களும் ஆமோதித்துச் சொன்னதிற்கு அடையாளமாக 'ததாஸ்து' அல்லது இதைப்போன்ற வேறு ஒரு சொற்றொடரால் முடிக்கவும். அடியில் குறிப்பிடும் ஜெபமந்திரம் விசேஷமாய்ப் பிள்ளைகளுக்குச் சொல்லப் பிரியமாயிருக்கலாம். அப்படிப்பட்ட ஜெபங்களெல்லாம் ஸர்வசாமான்ய பாஷையில் இருக்கலாம். அவைகள் கடவுளை ஸ்தோத்ரிக்கவும், அவரிடம் மனுப்பண்ணிக்கொள்ளக் கூடிய வேண்டுகோளாகவும் ஏற்படவேண்டும். பிரார்த்தனை என்மார்க்க சம்பந்தமும் மதஸம்பந்தமுமான உதவிபுரியவேண்டுமென்றிருக்கவேண்டும். அதில் விசேஷ பாகம் மற்றவர்களுடைய தேவைகளுக்கு அனுகுணமாக ஏற்படவேண்டும். குழந்தைகள் தாங்களே பிரார்த்தனைகள் ஏற்படுத்திக் கொள்ளச்செய்யலாம். பயபக்தி என்பது அவர்களுக்குப் பிடிபட்டபொழுது தங்கள் புத்திக்கு அப்போதைக்கப்போது புலப்படும் பிரார்த்தனைகளையும் சொல்லும்படி செய்விக்கலாம்.

பள்ளிக்கூடம் ஒவ்வொரு நாளும் விடுங்காலங்களில் உபயோகப்படுத்தவேண்டிய எல்லாமதஸ்தர்களுக்கும் பொதுவான ஜெபமந்திரம் :—

"இப்பூவுலகிலும், மோக்ஷலோகத்திலும் உள்ள எல்லா வஸ்துக்களையும் ஆள்கின்ற கடவுளே! உம்முடைய நன்மைக்காகவும், பராமரிப்புக்காகவும் உம்மை வந்தனம் செய்ய விரும்புகிற எங்களை அனுகூலமாய்ப் பாவிக்கிற உம்மைக் கெஞ்சி மன்றுடுகிறோம். நாங்கள் தவறுதலாய்ச் செய்திருக்கிறவைகளையெல்லாம் மன்னிப்பீர்களாக! உம்மை இன்னும் விஸ்வாசமாய் உமக்குப் பணிவிடை அல்

து கைங்கரியம் செய்யவும், உம்மை இடைவிடாது ஞாபகத்தில் வைத்துச் சிந்திக்கவும், நாங்கள் எவ்விதம் வசிக்கவேண்டுமென்று எண்ணுகிறோமோ அவ்விதம் நாங்கள் வசிக்கவும் கிருபைசெய்வீராக! இன்று இரவு எங்களுக்கு ஒருக்கால் நேரிட இருக்கும் சகல ஆபத்தினின்றும் எங்களைக்காப்பாற்றி எல்லாப் பாபச்செயல்களையும் பொறுத்தருள்வீராக! எங்கள் வீட்டிலும், உபாத்யாயருக்கும், ஜனங்களுக்கும், எங்கள் அரசன் அரசியருக்கும், தேசத்திற்கும் தங்கள் ஆசீர்வாதத்தைக் கொடுப்பீராக! துக்கத்தில் அல்லது சங்கடத்தில் இருக்கிற எல்லோருக்கும் சமாதானமும், சுகமும்கொடுத்துத் தங்களையே நம்பிக் கடைப்பிடிக்கும்படி செய்வீராக! எல்லாம் உம்முடையவே! நீ யன்றி யோரணுவும் அசையாது! ஸ்தோத்ரமும், க்யாதியும், கண்யமும் உங்கள்பொருட்டே எக்காலத்தும் ஆகுக".

ததாஸ்து.

ஓம் ஓம் ஓம்

உ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீராமேச்வர தேவஸ்தானம்

வேதசாஸ்திர மஹா வித்தியாசாலைத் தருமவிஞ்ஞாபனம்.

"மந்திரஹீனம் ஹதம் தைவதம்" "மந்திரத்திலிலாத தேவதை தவானகத்திலுமில்லையே" என்கிற வாக்கியத்தின் தத்துவத்தை நன்குணர்ந்து மந்திரங்களைத் தெரிந்து நல்ல உச்சாரணத்துடன் பூஜை செய்யவும், வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் பூரணமான பாண்டித்யத்தை உண்டுபண்ணவும் ஆகமக்ரந்தங்களை நன்றாய்க்கற்பிக்கவும், உபநயனம் விவாகம் முதலிய ஆர்ஷமான ஸம்ஸ்காரங்களை அர்த்தத்துடன் தெரிந்து அநுஷ்டானம் செய்விக்கவும் உத்தேசித்து இப்பாரதகண்டத்தில் மஹாவைபவங்களுடன் விளங்குகிற ஸ்ரீராமேச்வரம் தேவஸ்தானத்திலிருந்து வருஷந்தோறும் 8,000-ரூபாய்க்குக் குறையாமற் செலவுசெய்து சென்னை ஹைகோர்ட்டாரவர்கள் அநுமதியின் பேரில் ஒரு மஹாவித்யாசாலை மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் வேதங்கள், ஆகமங்கள், காவ்யநாடகாலங்காரங்கள், வியாகரணம், தர்க்கம், மீமாம்ஸா, ஸாங்கியம், யோகம், வேதாந்தங்

கள் பூர்ணமாய்க் கற்பிக்கும்படி ஸம்ஸ்கிருதத்தில் M. A., பரீக்ஷையில் தேறிய ஒருவரைப் பிரின்ஸிபாலாகவும் அந்தந்த சாஸ்திரங்களிற் பூர்ண பாண்டித்ய முள்ளவர்களை உபாத்யாயர்களாகவும் நியமித்து, பூர்விக ஹிந்துசம்பிரதாயத்தை அனுசரித்து, வித்தியார்த்திகளுக்குக் குருகுலவாஸம் ஏற்படுத்தி, யதேஷ்டமாய்த் தேவஸ்தானம் செலவில் அன்னவஸ்திரங்கள் இனாமாகக் கொடுத்துத் தமிழ்ப்பாஷையிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி முதலிய பாடல்களையும் கற்பித்து ப்ராசீன ஆரியமதங்களின் கொள்கைகளும், வேத சாஸ்திரங்களும் மலினமாகாமல் வித்தியா அபிவிருத்தி செய்துவரப்படுகிறது. அதன் மேல்விசாரணையை ராமனாதபுரம் ஜில்லா ஸப் கோர்ட்டார் அவர்களின் நியமனப்படி அட்வைஸரி கமிட்டியார் (உபதேசசங்கம்) மூலமாய்த் தேவஸ்தானம் கமிட்டியார் செய்துவருகிறார்கள்.

இந்த உத்தேசமும் தருமமும் திருப்திகரமாய் நிறைவேற வேண்டுமானால் வருஷந்தோறும் 24,000 ரூபாய் தற்காலம் வேண்டியிருக்கிறது. வித்தியாசாலைக்குத் தகுந்த ஸ்தலமும் தோட்டமும் விசாலமாய் நதிதீரத்தில் அமைக்கக் குறைந்தது லக்ஷம் ரூபாய் ஆகிறது. இதன் விவரங்களை மதுரை ராமேச்வரம் தேவஸ்தானம் மஹாபாடசாலையின் பிரின்ஸிபாலிடம் நேரிலேனும் எழுத்துமூலமாயேனும் தெரிந்துகொள்ளலாம். மேற்குறித்த தருமத்தில் சிரத்தையுள்ள ஆஸ்திகசிகாமணிகள், எல்லாத் தானங்களிலும் வித்தியா தானமே உத்தமோத்தமமாகையால் அதன்பொருட்டு ரூபாய் 1-க்கு குறையாமல் யதாசக்தி ஸ்ரீராமேச்வரம் தேவாலயத்திலும் தனுஷ்கோடியிலும் தேவஸ்தானம் ஸீல் முகருடன் வைக்கப்பட்ட உண்டியற் பெட்டிகளில் ஸமர்ப்பணம்செய்து ரசீது பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் பெயரும் விலாசமும் சாச்வதமாய் தேவஸ்தானம் ரிக்கார்டுகளிலும் வித்தியாசாலை ரிபோர்ட்டுகளிலும் பிரசுரம் செய்யப்படும். தேவஸ்தானம் மஹாபாடசாலைப்பிரின்ஸிபாலுக்குநேரில் இதரஸ்தலங்களிலிருந்து இந்தத் தருமத்தை உத்தேசித்துத் திரவியங்களை மணியார்டர் மூலமாயும் அனுப்பலாம். அவற்றைப் பெற்றுக்கொண்டு தேவஸ்தானம் கணக்குகளிற் பாடசாலைத் தருமத்திற்காக வரவு வைத்து ரசீதுகள் போஸ்டு மூலமாய் அனுப்பப்படும்.

R. கிருஷ்ணமாசாரியர், M. A.,
(வித்தியாநிதி)
இராமேச்வரம் மஹாபாடசாலை பிரின்ஸிபால்,
மதுரை.

ஸ்ரீ:

காரைக்குடி.

ஹிந்து மதாபிமான சங்கம்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் பிறந்தினக் கொண்டாட்டம்.

இந்தச் சங்கத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் ௮௰௭-வது பிறந்தினக் கொண்டாட்டம் நிகழும் மாசி௴ ௨௰௬௳ (9—3—19-ல்) நடைபெற்றது. அன்று மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி பிர்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் அக்கிராசனத்தில் மாலை சஇ-மணிக்குச் சபை கூடியது. பதுக்கோட்டை பிர்மஸ்ரீ R. மீனாக்ஷிசுந்தரமய்யரவர்கள் "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்" ஜனன விசேஷத்தைப்பற்றி விரிவாக ஜனங்கள் பக்தி வசப்பட்டு மகிழ உபந்நியசித்தார்கள். பின்னர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்தியாசாலை மாணவன் சிரஞ்சீவி அரு. சோமசுந்தரம் "ஒற்றுமை" யைப்பற்றியும் பிர்மஸ்ரீ மோ. வெ. கோவிந்தராஜய்யங்காரவர்கள் "ஸ்ரீராமபிரானின்" அவதார விசேஷத்தைப்பற்றியும் மிக இனிமையாக உபந்நியசித்தார்கள். பின்னர் இந்தச் சங்கத்தில் ஏற்படுத்தி நடைபெற்று வருகிற தமிழ்க்கலாசாலைக்கு "ஸ்ரீராமகிருஷ்ண கலாசாலை" என நாமகரணம் சூட்டப்பெற்றது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் என்னும் துண்டுப்புத்தகமும் ஸ்ரீபரமஹம்ஸரின் திருவுருவப்படமும் வந்திருந்தவர்கட்கு இலவசமாக வழங்கப்பெற்றன. சபையோர்கட்கும் உபந்நியாசகர்கட்கும் வந்தனங்கூறப்பெற்றும் அக்கிராசனாதிபதியவர்கட்கும் உபந்நியாசகர்கட்கும் புஷ்பமாலை சூட்டப்பெற்றும் இரவு ௯-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது. சுபம்.

பிர்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் இயற்றிய வாழ்த்துப்பா ;

பீடுடைய ஸ்ரீராம கிருஷ்ணனெனும் பரமஹம்சன் பிறப்புக்காதை,
நாடியிவண் கேட்டு வக்கும் நலம் வாய்ந்த நல்லோர்கள் நாளும் வாழி!
ஈடுநான் ஹிந்துமத அபிமான சங்க மென்றும் இசைமிக் கோங்கித்,
தோடுடைய செவிப் பெருமான்திருவருளால் நீடூழி துலங்கி வாழி!

காரியதரிசி.